

# நந்தாவைக் கேளுங்கள் —

சிறுவர் உரிமைகளை, கடமைகளை விளக்கும் கைநூல் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன்

ச. தர்சி.

உலக ஆசிரியர்
தினம் 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம்:- நந்தாவை கேளுங்கள்

பதிப்பு:- டிசம்பர் 2003

பக்கம்:- 40

பதிப்புரிமை:- யாழ் சமூக செயற்பாட்டு நிலையம்

பிரசுரம்:- நோபிள் பிறிண்ரேஸ்,
103, பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

வெளியீடு:- யாழ் சமூக செயற்பாட்டு நிலையம்

அட்டைப்படம்:- முன் - இராசையா
பின் - டொமினிக் ஜீவா

நன்றி:- இந்நூலுக்கு பெறுமதிமிக்க ஆலோசனை வழங்கிய அனைவருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுழைவாயில்

இந்தப்படைப்பானது எமது பிரதேசத்தில் பரிபூரண வளர்ச்சியை வேண்டி நிற்கின்ற சிறார்களுக்காக. அவர்கள் உரிமைகளையும், கடமைகளையும் அவர்களின் பாணியில், சாதாரண நடைமுறை வாழ்க்கைப் பாணியில் கூறுகின்ற கைநூல். இதன் மூலம் சிறுவர்கள் தங்கள் உரிமைகளை தெரிந்து கொள்வதுடன் தங்கள் கடமைகளையும் உணர்ந்து கொண்டு ஆளுமையுள்ள முழுமையான மனிதர்களாக உருவாக வேண்டும் என்பதே எமது நோக்கம். இவ் வழிகாட்டல் கை நூல் சிறுவர் குழுக்களை அமைத்து வழிநடத்த முனையும் ஊக்குனர்களுக்கு வழிகாட்டும்.

இப்புத்தக உருவாக்கத்திற்கு உதவி புரிந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**கு. வி. நிஷாந்தன்**

இணைப்பாளர்,

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தாவை கேளுங்கள்

**சற்று நில்லுங்கள்**
**கூறுவதைக் கேளுங்கள்**
**கலந்து பேசுங்கள்**
**முடிவு எடுங்கள்**
**செயற்படுங்கள்**

சிறுவர்களாகிய 18 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாருக்கும் முன்வைக்கும் ஜனநாயக உரிமையுடன் கூடிய உயிர்வாழ்தல், பங்களிப்பு, மேம்பாடு, பாதுகாப்பு தொடர்பான உரிமைகளையும் அவர்கள் கடமைகளையும் எடுத்தியம்பும் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை

தலைவர்கள்



இன்று

சிறுவர்கள்



வரையறுக்கப்பட்ட சர்வதேச - உள்ளூர் மட்டத்தில் சிறுவர் உரிமைகள் பொறுப்புக்கள் யாவை? அவற்றை அடைவதற்கு பெற்றோர், ஆசிரியர், சமூகம், அரசு (ஆகியோர்) வழிநடத்திச் செல்லவும், பாதுகாக்கவும் வேண்டும் என சிறுவர் உரிமைச் சாசனம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யார்? இந்த நந்தா**

இவள்தான் எங்களின் கதாநாயகி
சமூகத்தை ஊடறுத்து பார்ப்பவள்



**எண்ணம்** → ஆரோக்கியமான எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குதல்

↓

**எழுச்சி** → துடிப்பானவள்
உணர்வுபூர்வமானவள்
இடர்பாடுகளை எதிர்கொள்பவள்

↓

**சிந்தனை** → விவேகமுள்ளவள்
ஆற்றல் சார்ந்தவள்

↓

**கருத்து** → முற்போக்கானவள்
காலத்தின் தேவையை உணர்ந்தவள்
கொள்கையில் உறுதியானவள்

↓

**செயல்** → தலைமைத்துவ பண்புடையவள்
பரிகாரம் தேடுபவள்
கருத்துக்கு செயல்வடிவம் கொடுப்பவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்தாவின் செயல்வடிவ உத்திகள்



★ அர்ப்பணிப்புடன் செயற்படுதல்

★ பிரச்சனைகளை இனங்காணுதல் தேவைகளை முன்னுரிமைப்படுத்தல்

★ ஒத்தகருத்துடையவர்களின் கூட்டுமுயற்சியை, புரிந்துணர்வை உருவாக்குதல்.

★ ஆசிரியர் பெற்றோர் வழிகாட்டலைப் பெறுதல்

★ மக்களின் பங்களிப்பை உறுதி செய்தல், ஒருங்கிணைத்தல்

★ அரசின் உதவிகளைப் பயன் நாடிப் பெறுதல்

★ கல்வியறிவு மேம்பாடு

★ கிராமமட்ட நிறுவனங்களை வலுப்படுத்தல்


★ சகல மட்டங்களிலும் விழிப்புணர்வு ஊட்டல்

★ கிராமிய சமூக - பொருளாதார உந்தலை ஏற்படுத்தல், வறுமை தணிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கள தேடல்





## கலந்து பேசி புரிந்துணர்வு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

**சிந்துஜன் பாடசாலை செல்லும் ஆறு வயது சிறுவன் இவன் தனது ஆதங்கத்தை நந்தாவிடம் வெளிப்படுத்துகிறான்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன் வீட்டில்



அன்பு, அரவணைப்பின்மை,
வீட்டுவேலை அதிகம்,
படிக்க நேரம் சொற்பம்,
சித்தியின் கெடுபிடி,
நிம்மதி அற்றநிலை.

சிந்துஜன் பாடசாலையில்

அலட்சியம்
அவமானம்
அவலநிலை
மன அமைதியின்மை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன் தனது பெற்றோருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்த ஒரு காலமுண்டு. நாட்டின் நிலமை காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வின் பொழுது இவன் தனது தாய் தந்தையரை இழந்துவிட்டான். அதோடு அவனது மகிழ்ச்சியும் தொலைந்து விட்டது. இந்நிலையில் சித்தியின் வீட்டில் தங்க இடம் கிடைக்கின்றது. ஆனால் இவனது நலனில் சித்தியானவள் எதுவித அக்கறையும் எடுத்துக்கொள்வதில்லை

வேலையை மட்டும் வாங்கினாள். சிந்துஜனுக்கு படிக்க, விளையாட நேரம் கிடைப்பது மிகச் சொற்பம். இவனிடம் இருக்கும் இரண்டு சட்டைகளில் ஒன்று மிகவும் பழையது. இந்நிலையில் சிடுசிடுப்பும் கடுகடுப்பும் சிந்துஜனிடம் குடிகொண்டு விடுகிறது.

சிந்துஜனின் இன்றைய நிலைமையை நந்தா புரிந்து கொள்கின்றாள்

★ மன அழுத்தம்
தனக்கு அன்பு, ஆதரவு
அரவணைப்புச் செலுத்த
யாரும் இல்லை, என்ற உணர்வு
இந்நிலையை
உருவாக்கிவிட்டது

★ உடல் நலம், ஊட்டச்
சத்தற்ற உணவால் பாதிக்கப்பட்டுள்ளது


★ சுத்தம், சுகாதாரம் என்பவற்றினைப்
பேண விரக்தியான, மனப்போக்கு
ஏற்படுத்துகின்றது.

★ ஒத்த வயதினரிடம் சேர விடாமை,
இவனை ஒதுங்க வைக்கின்றது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்துஜனின் இன்றைய நிலைக்கு யார் பொறுப்பு?




★ **பாதுகாவலர்** - தன்மீது அன்பும் அரவணைப்பும் செலுத்தப்படுகின்றது, தனக்கு பாதுகாப்பு உண்டு என்ற உணர்வை சிந்துஜனுக்கு ஏற்படுத்த வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **ஆசிரியர்** சிந்துஜனின் பின்னணியை ஆராய்ந்து அவனது மனஅழுத்தத்தை போக்க ஆசிரியர் உதவ வேண்டும் முரண்பட்ட எண்ணத்தை அவனது மனதிலிருந்து நீக்க வேண்டும்


★ **சமூகம்** ஆரோக்கியமான எதிர்கால சமுதாயத்தை உருவாக்க சமூகம் தனது பங்களிப்பை வழங்கவேண்டும்.

★ **அரசு** - நீதி, நிர்வாகம் என்ற தனது அலகுகளூடாக ஆதரவற்ற சிறுவர்களைப் பாதுகாத்து நலன்புரி நடவடிக்கைகளை ஒன்றிணைத்து அவர்களுடைய மேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன் சிரிக்கின்றான்
இது பழைய சிந்துஜன்
படிக்கின்றான்
பாடுகின்றான்
விளையாடுகின்றான்
இது நந்தாவின் சாதனை




சிறுவர் உரிமை என்பது பாதுகாப்புடன் கூடியதும் எல்லா பிள்ளைகளுக்கும் பால், இனம், நிறம், சாதி, மத வேறுபாடு இன்றி வழங்கப்பட வேண்டியதும்; பெற்றோர், ஆசிரியர், பங்களிப்புடன் அதனை நிறைவேற்றி வைக்க வேண்டிய கடமை அரசுக்குண்டு - சிறுவர் உரிமை சாசனம் இதனை அங்கீகரிக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

**ரூபனுக்கு எல்லாமுண்டு, ஒன்றைத்தவிர, அது எது?**



பத்து வயது ரூபன் சகல வசதிகளும் கொண்ட செல்வமான குடும்பத்தைச் சேர்ந்தவன். பெற்றோர் அன்பை பொழி கின்றார்கள். அரவணைத்து ஆதரவு கொடுக்கின்றார்கள் தகப்பன் பாடசாலை செல்லும் பொழுதும், வரும் பொழுதும் வாகனத்தில் கூட்டிச் செல்கின்றார். ஆனால் ரூபன் விரக்தி மனநிலையில் காணப்படுகின்றான் - பெற்றோரை வெறுக்கின்றான் - ஏன் இப்படிச் செய்கின்றான் ரூபன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபனின் சோக நிலையானது நந்தாவை
சிந்திக்க வைக்கிறது. அவனது
சிக்கல்களை ஆராய்கின்றாள்

**ரூபனுக்கு ஏதோவொரு மனக்குறை**

★ பாசமுள்ள அம்மா
ஆதரவான அப்பா
தேவைக்கதிகமான வசதிகள்
இவை அவனைதிருப்திப்படுத்தவில்லை

★ எப்பொழுதும் படிக்கும்படி நெருக்கடி
வெளி நண்பர்களை அணுக விடாமை,
கூடி விளையாட முடியாமை,
படிப்பே உலகம்
வீடே தஞ்சம்

ரூபனின் மன அழுத்தத்தைக் குறைக்க
பெற்றோர் தமது அணுகுமுறையை
மாற்றிக்கொள்ள வேண்டும்.
இது நந்தாவின் கண்டுபிடிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நந்தா ரூபனின் பெற்றோரை சந்திக்கின்றாள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ரூபன்



சந்தோசமாக உள்ளான்

நன்றாகப் படிக்கின்றான்

பிள்ளைகளுடன் விளையாடு
கின்றான்

பெற்றோரை நேசிக்கின்றான்

சகலருடனும் இயல்பாகப்
பழகுகின்றான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

இது வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள ஓர் கிராமம். இங்கு பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை இதுவரை பாடசாலைகசு செல்லாத பிள்ளைகள் கணிசமாக உள்ளனர். இந்தக் கிராமம் நந்தாவின் கவனத்தை ஈர்க்கின்றது

**கிராமிய பிரச்சனைகள்**

**ஆய்வு**



- ★ அறியாமை ஓர் புறம்
- ★ வறுமை மறுபுறம்
- ★ போசாக்கு இன்மை.

இன்னொருபுறம்;
நந்தா நண்பர்களுடன்
கிராம நிலைமையை
ஆராய்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுடைத்தலை கூலித் தொழிலாகக் கொண்ட 68 குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன. பாடசாலை செல்ல வேண்டிய பிள்ளைகள் பெற்றோருடன் தினக்கூலியாக கல்லுடைக்கச் செல்கின்றார்கள் இது தவிர கடைசிப்பிள்ளையை பராமரிக்க மூத்தபிள்ளையை பாடசாலைக்கு செல்லாது, நிறுத்தி வைத்துவிட்டு பெற்றோர் வேலைக்கு செல்வது இங்கு சகஜம். பாடசாலை வாயிலை மிதிக்காத பிள்ளைகளில் 40 பேர் வரை இங்கு உள்ளனர். வேலைக்கு செல்லும் பிள்ளைகள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவது சாதாரணமாக உள்ளது. பீடி, சிகரட்டுக்கு அடிமையான பிள்ளைகளும் காணப்படுகின்றனர்.

## செயற்திட்டம் தயாராகின்றது

★ தேவைகள் ஆராயப்படுகின்றன.

★ பாடசாலை செல்லாத
பிள்ளைகள் பற்றிய
தரவுகள் பெறப்படுகின்றன.

★ சமூக நிறுவனங்கள்
புனரமைக்கப்படுகின்றன.

★ தொண்டர் குழுக்கள்
அமைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தாவின் பார்வையிலும்
எண்ணத்திலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் பாடசாலைக்கு போகவில்லை

கல்லுடைக்க போனால் கையில்
காசு கிடைக்கும்

பணத்திலும் பார்க்க
படிப்பு முக்கியம் அல்லவா

பணத்தைக் கொண்டு
விரும்பியதை வாங்கலாம்

படித்தால் பெரிய பதவி
கிடைக்கும் பணம் கிடைக்கும்

இனிநான் பாடசாலை
செல்வேன்

## செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றது

★ தொண்டர் குழுக்கள் வீடுவீடாகச் சென்று விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன

★ பெற்றோருக்கு பிள்ளையின் கல்வி அவசியம்தேவை பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது

★ மாலை நேர வகுப்புக்கள் மேலதிகமாக இக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன


★ கலை நிகழ்ச்சிகள் மூலம் பிள்ளைகள் ஒன்றிணைக்கப் படுகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புணர்வு

நாங்கள் பாடசாலை
போகின்றோம் - ஆவோம்
எதிர்காலத்தில்......




1989ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அங்கீகரித்த சிறுவர் பற்றிய சமவாயத்தைத் தொடர்ந்து 1990ம் ஆண்டு "யாவருக்கும் கல்வி" என்ற தொனிப் பொருளில் தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற உலக மாநாட்டில் கல்வி பிரகடனப்படுத்தப்பட்டது, இது எல்லா பிள்ளைகளும் கல்வியில் சமவாய்ப்புப் பெற உரிமை உடையவர்கள் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

காந்தன் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த அரச ஊழியன். சிகரட் குடிப்பழக்கத்திற்கு நெடுநாளைக்கு முன்னர் அடிமையாகி விட்டான். கணவனின் இப்பழக்கத்தை நீக்க மனைவியானவள் போராடி வருகின்றாள்.

காந்தனின் மனைவி சிகரட் குடிப்பதற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும்படி நந்தாவை கேட்டுக் கொள்கின்றாள். நந்தா இது தொடர்பாக ஓர் இயக்கத்தையே ஆரம்பித்து விட்டாள்

**மனைவியின் விருப்பம்**



★ சிகரட், மது போதைப்பொருள் பாவனைத்தடுப்பு, அதற்கான விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள்

★ சமூக ஒத்துழைப்பை பெறல் என்பன சரியான பலனைத் தருகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் ஒத்துழைப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தா கடைக்காரர்களைச் சந்திக்கின்றாள். பேசுகின்றாள். அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுகின்றாள்.

★ சிகரட், மது, என்பனவற்றை பிள்ளைகள் வாங்க வந்தால் கடைக்காரர்கள்
விற்க மறுக்க வைக்கின்றாள்.

★ சிகரட், போதைவஸ்து எதிர்விளைவு
பற்றி பிரச்சாரம்
செய்கின்றாள்.

★ கிராம மட்டத்தில் விழிப்புணர்ச்சி
கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன

இப்பொழுது இக்கிராமத்தில் சிகரட், மது விற்பனை குறைந்து விட்டன. ஆனால் அது பற்றி கடைக்காரர்கள் கவலைப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிமுகாம்

# 5



தண்ணீர் பற்றாக்குறை;

மலசலகூட பற்றாக்குறை;

மது, சிகரட் பழக்கம்;

போதிய இடவசதியின்மை;

மனோநிலை பாதிப்பு;

பிடிப்பற்ற வாழ்க்கை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை

கொடிது கொடிது
இளமையில் வறுமை
பெற்றோரது வறுமை சிறுவர்களைப்
பாதிக்கின்றது.
சிறுவர்களின் வறுமை கல்வியை
பாதிக்கின்றது.



**வறுமையின் வெளிப்பாடு**

★ அடிப்படைத் தேவைக்கான வருமானம் இன்மை
★ உழைப்பவர் ஒருவர் தங்கியிருப்பவர் பலர்
★ போசாக்கின்மை
★ சேமிப்பு இன்மை
★ நோய் நொடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்தாவின் ஆய்வில்

வறுமை பற்றிய கணிப்பீடு

- ★ திட்டமிடப்படாத குடும்பப்பாங்கு
- ★ தந்தையின் வருமானம் மதுவுக்கு
- ★ தாயின் வருமானம் குடும்பச் செலவுக்கு
- ★ சேமிப்பு இன்மை
- ★ பிள்ளைகளின் படிப்புக்கு பணமின்மை
- ★ சுகாதார நலன் புறக்கணிப்பு
- ★ கல்வியில் பின்தங்கிய நிலை

## குடிப்பழக்கம்

குடி குடியைக் கெடுக்கும்
உடல் நலனைப் பாதிக்கும்
சமூகத்தை சீரழிக்கும்
செல்வத்தை அழிக்கும்

**குடிமகன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநந்திய குடிமகன்




நந்தா மதுவுக்கு
எதிராக பிரசாரம்
செய்கின்றாள்.

கருத்தரங்குகளை
நடத்துகின்றாள்.

வறுமையைத் தணிக்க
வழி சொல்லுகின்றாள்.

சேமிப்பை ஊக்கு
விக்கின்றாள்.

பெண்கள் இயக்கத்தை
உருவாக்குகின்றாள்.

வீட்டு நிர்வாகப்
பாங்கைப் பெண்களுக்கு
போதிக்கின்றாள்.


ஒவ்வொருவரும் தரம் வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்க உரிமை உடையவர்கள். சிறுவர்களுக்கு பெற்றோர், பாதுகாவலர் இதனை வழங்க வேண்டும் தவறின் அரசு தலையிட்டு அதனை உறுதி செய்ய வேண்டும். இது சிறுவர் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

நந்தா
எண்ணங்களால், - நோக்கங்களால்
சேவையால்,
பிரபல்ஜம் அடைகின்றாள்,
பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் ஒலிபரப்பு
அவளைப்பேட்டி காண்கின்றன,
இது அவள் தொலைக்காட்சிக்கு
அளித்த பேட்டி ஒன்று,



கேள்வி: நந்தா அவர்களே உங்கள் வயது சிறியது. உங்கள் சேவை பெரியது. இந்த வயதில் சமூகம் சார்ந்த சிந்தனை உங்களுக்கு எப்படி வந்தது?

நந்தா: சுற்றாடலை உற்றுப்பார்கின்றேன். மகிழ்ச்சியை விட கவலையும், வேதனையும் மிஞ்சிக் காணப்படுகின்றன. எனது பங்களிப்பை இது தொடர்பாக வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை சூழலே எனக்கு வழங்கியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: சிறுவர் கல்வியில் விசேட அக்கறை காட்ட என்ன காரணத்தை கூறுவீர்?


நந்தா கல்வி என்பது வாழ்வுக்கு ஆதாரத்தையும் சமூகத்துடன் இசைந்து வாழும் உணர்வையும் கொடுக்கின்றது. அறியாமையை அகற்ற, தேவைகளை, உரிமைகளைத் தெரிந்துகொள்ள, பொறுப்புக்களை உணர்ந்து கொள்ள கல்வி அறிவு அவசியம் வேண்டியிருக்கின்றது.

## நந்தாவின் இலட்சியக் கனவு

**தேவையானது**



**தேவையற்றது**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: அறியாமை நீங்க கல்வி அறிவு - இதனை சற்று விளக்குக?

நந்தா: வட்டுக்கோட்டையில் ஏற்பட்ட எனது அனுபவத்தைக் இங்கு கூறுகின்றேன் ஒரு தாயானவள் தனது பிள்ளைக்கு இளம்பிள்ளைவாத தடுப்பு சொட்டுமருந்து உரிய நேரத்தில் வழங்காததினால் பாதிக்கப்பட்ட பிள்ளையை அங்கு கண்டேன்.

பத்திரிகைகள், சுகாதாரப்பகுதியினர் எத்தனையோ பிரசாரம் செய்த பொழுதும் அந்த கல்வியறிவற்ற தாய் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உரிய காலத்தில் கொடுக்கத் தவறிவிட்டாள் காலதாமதம் பயனற்றுப் போய்விட்டது




**அறியாமையின் விளைவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: பாடசாலை செல்லாத பிள்ளை பாடசாலை செல்ல வைக்க என்ன உத்திகளைக் கையாளுகின்றீர்கள்?




**கல்வியின் மகத்துவம்**


நந்தா: விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றோம். வீடு வீடாகச் சென்று இவ்வுணர்வை ஏற்படுத்துவதுடன் வீட்டு பொருளாதாரத்தை வருமானத்தை அதிகரிக்கவும் வழியைக் கூறுகின்றோம்.

கேள்வி: பாடசாலையை விட்டு வெளியேறும் சிறுவர்களின் எதிர்காலம் பற்றி என்ன ஆலோசனை கூறுவீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பங்களிப்பு



நந்தா: இது சற்று விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம். இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். பாடசாலைக் காலத்திலேயே இவர்களுக்கு தொழில் வாய்ப்பு தொடர்பாக வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். இவர்களின் இயல்பாற்றல், சக்தி போன்றவற்றிற்கு ஆலோசனை வழங்கி துணிவு, நம்பிக்கை பொறுப்புணர்ச்சி, ஊக்கம் என்பவற்றை இவர்கள் மத்தியில் கட்டியெழுப்ப வேண்டும். எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் சவால்களை வென்றிடும் ஆற்றலை பெறும் வழிகளை இவர்களுக்குக் காட்ட வேண்டும்.

கேள்வி: கட்டிளம் பருவத்தினர்களின் பொறுப்புணர்வுகள் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

ஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: எதனையும் செய்யத்தூண்டும் பருவம். - தம்மை சமூகத்திற்கு வெளிக்காட்டும் பருவம் இப்பருவத்தினர் பற்றி ஆசிரியர், பெற்றோர், மற்றோர் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் இவர்களை வழிநடத்தி நாளை சமுதாயத்திற்கு பங்களிப்பு செய்ய வைப்பது சகலரதும் பொறுப்பாகும்?

**ஒருங்கிணைப்பு - நண்பர்கள்**



**நண்பர்களின் புரிந்துணர்வு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: ஆதரவற்ற சிறுவர் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என எண்ணுகின்றீர்கள்?

நந்தா: ஆதரவற்றவர் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படக்கூடாது. அன்பு, ஆதரவு, அனுசரணை, பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

அன்பின்
அரவணைப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மனமகிழ்ச்சி

★ புத்துணர்வு

★ சொந்த இடத்தில் இருப்பது
என்ற உணர்வு

★ நிலையற்றதன்மை என்ற
எண்ண நீக்கம்

★ மனத்தளர்ச்சி போக்கல்


★ போசாக்கு நிலைமைகள்

★ சுகாதார நலன்கள்

என்பனவற்றை பேண பாதுகாவலர், சமூகம், அரசு, விசேட ஒழுங்கும், கவனமும் எடுக்க வேண்டும் இவர்களது கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்

கேள்வி: உங்கள் இலட்சியம், ஈடேற நண்பர்களின் பங்களிப்பு எந்த அளவு உதவுகின்றது?

நந்தா: எனது வெற்றியின் இரகசியமே எனது நண்பர்களின் பங்களிப்பில் தங்கியுள்ளது. நண்பர்களுடன் கூட்டாக; தனித்தனியாக செயற்பட்டு இலக்கை அடைகின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலசமயம் தோல்வியடைகின்றோம். ஆனால் துவண்டு விடுவதில்லை.

கேள்வி: இன்றைய இளைஞர்கள் தெருவில் நின்று பெண்களை கேலிசெய்தல், வன்முறை செய்தல் என்பதை நிறுத்த என்ன செய்யலாம் என்று கருதுகின்றீர்?

நந்தா: விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மனிதனுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. தெருவில் நின்று கேலி செய்பவரின் எண்ணத்தின் மறு பக்கத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும், இருபாலாரையும் இணைத்து சமூகநலன் சேவையில் ஈடுபட வைக்க வேண்டும். இவை ஓர் இயல்புநிலையை உருவாக்கும் என நம்புகின்றேன். புரிந்துணர்வு என்பது பலனை நிச்சயம் அளிக்கும்.

## ஆண் பெண் சகோதரத்துவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் காட்டும் அக்கறை, மற்றும் வழிநடாத்தல் என்பன பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

நந்தா: தாய், தந்தையார் குடும்பத்தில் வீட்டில் முன் மாதிரியாக நடந்து கெள்ள வேண்டும்.

குடும்பத்தில் சண்டை சச்சரவின்றி அன்பாக பெற்றோர். நடந்து கெள்ள வேண்டும். இவர்களை பிள்ளைகள் பார்த்து பழகிக் கொள்ள வேண்டும். இதில் காணப்படும் விழுமிய பண்புகள் நாளாந்த வாழ்வில் பிள்ளைகள் கடைப்பிடிப்பார்கள். சிறுவயதில் அவர்களின் மனதில் படிந்துவிடும். பொறுப்புள்ள பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வழங்கும் கொடை இதுவாகும்.

கேள்வி: அரச ஜந்திரங்களிலிருந்து உரிய சேவை சிறுவர்கள் நலன் தொடர்பாக கிடைக்கின்றதா?

நந்தா: அரச ஊழியர்களின் அசமந்தப் போக்கு சிறுவர்நலன் விடயத்தில் ஒழுங்காகக் கிடைப்பதில்லை என்பதில் உண்மையுண்டு. எனினும் இன்றைய சூழல்நிலை, நிச்சயமற்ற தன்மை, அடிப்படை சேவை வசதிகளை பெறல் என்பனவற்றை அரச ஊழியர் விடயத்தை கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய இவை அரச ஊழியர்கள் சேவை வழங்கல் ஆற்றலை மட்டுப்படுத்து கின்றது.

கேள்வி: சீதனம் வழங்குவது பற்றிய உங்கள் கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தா: சீதனத்தை வலிந்து கேட்பது ஒரு சாபக்கேடு மணமகளின் தாய் ஒரு பெண் - மணமகள் இன்னோர் பெண் இரு பெண்களும் இணைந்து இதற்கு வழிகாணவேண்டும்.

கேள்வி: சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் தகுந்த பலனைத் தருகின்றதா?

நந்தா: ஆம், சட்டரீதியாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. துஷ்பிரயோகம் பல வகைப்படும். பாலியல் துஷ்பிரயோகம் வீடு, கடையில், மற்றும் தொழில் தலங்களில் சிறுவர் உழைப்பு, சிறுவர்களுக்கான கல்வி மறுப்பு எல்லாம் சிறுவர்களுக்கு எதிரான நடவடிக்கையாகும். மற்றும் மது, சிகரட், போதைவஸ்து என்பன தொடர்பான பாவனைச் சூழலிலிருந்து சிறுவர்கள் மீட்டு எடுக்கப்பட வேண்டியவர்க்ள். பொது இடங்களில் ஆபாசவார்த்தைப் பிரயோகமும் ஒரு வகை துஷ்பிரயோகம்தான். இவை தொடர்பாக பெற்றோர், சமூகம், அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

கேள்வி: சினிமா, தொலைக்காட்சி சிறுவர்களின் நேரத்தை வீணாக்குகின்றது - இதில் எந்தளவு உண்மையுண்டு?

நந்தா: சாதக பாதகங்கள் உண்டு. தகவல்களையும் நவீன தொழில்நுட்பங்களையும் பெற இவை உதவுகின்றது என்பதில் உண்மையுண்டு. அதே நேரம் தேவையற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோக்கு, ஆபாச நிகழ்ச்சிகள் பிள்ளைகளை திசை திருப்புகின்றன. எனவே பெற்றோர் பிள்ளைகள் பார்க்கக்கூடிய நேரத்தையும், நிகழ்ச்சியையும் தெரிவுசெய்து அவர்களைப் பார்க்க அனுமதிக்க வேண்டும்.











முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளுக்காக....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தாவைக் கேளுங்கள்



யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தினால் சிறுவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் வலியுறுத்தும் சிறுவர் பாதுகாப்பு தேடர்பான செயற்திட்டத்தின் கீழ் UNHCR இன் நிதி அனுசரணையுடன் வெளியிடப்படும் வழிகாட்டல் கைநூல்

JSAC

UNHCR

Noble Printers, 103, Palaly Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org